இளைஞர், யுவதிகள் ஆயுதம் ஏந்தினால் எமது பலம் பெருகும்!

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 26 இதழ் 298
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 11-12-1993

## அரசியல்துறை அறிக்கை

(யாழ்ப்பாணம்)

''பூநகரி பெரு வெற்றியில் நாம் பறித்தெடுத்த ஆயுதங்கள் ஆயுதங்களையும் அதிகரித்து எமது தேசிய விடுதலை இயக்கத்தை பலம் பெருந்தியதாக கட்டியெழுப்புவோம். எமது பலம்தான் எமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும். எமது இளைஞர்களும் இளம் பெண்களும் ஆயுதம் ஏந்தும் போதுதான் எமது பலம் பெருகும்'' இவ்வாறு பூநகரி தாக்குதல் வெற்றிவிழா குறித்து தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல்துறை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

## பூநகரி வெற்றி விழா மட்டுவிலில் அணிவகுப்பும் பொதுக்கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

பூநகரி கூட்டுத்தளம் தாக்குதலின் வெற்றிநாள் இன்று 11ம் திகதி தொடக்கம் 13ம் திகதி வரை மூன்றுநாட்கள் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

(3ம் பக்கம் பார்க்க)

## போரை நிறுத்துங்கள் புலிகளும் எம்பிள்ளைகளே கொழும்பில் நேற்று பெண்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

நாட்டில் நடந்துவரும் உள்நாட்டுப்போரை எதிர்த்து சிங்களப் பெண்கள் நேற்று கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தினார்கள்.

மனித உரிமைகள் தினத்தையொட்டி ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் இறுதியில் போருக்கு எதிரான நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டமாக மாறியதாக அவதானிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பெண்கள் அனைவரும் போருக்கு எதிராகவே குரல் எழுப்பினார்கள். ''வேண்டாம் வேண்டாம் இந்தப் போர்'' ''மனித உயிர்களை பலிகொள்ளும் இந்தப்போர் வேண்டவே வேண்டாம்'' இந்தப் போரில் இருதரப்பிலும் மடிவது எமது பிள்ளைகளே மனிதர்களை மனிதர் கொல்வது கூடாது. ஆகவே நாம் இந்தப்

(3-ம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சி பகுதியில் நேற்றும் அகோர விமானக் குண்டு வீச்சு

## மனித உரிமைகள் தினத்திலும் தாக்குதல்

(கிளிநொச்சி)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் நேற்றும் கிளிநொச்சியில் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் அகோர குண்டுத் தாக்குதலை நடத்தின. இத்தாக்குதலில் பலர் காயமடைந்துள்ளதுடன் பரீட்சை எழுதிக்கொண்டிருந்த மாணவர்கள் சிதறிஓடினர். பாடசாலை கட்டிடம். வீடுகள் சேதமடைந்தன

இத் தாக்குதலினால் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சை நடந்துகொண்டிருந்த பாடசாலை உட்பட பல கட்டிடங்கள் சேதமடைந்தன

நேற்றுக்காலை 8 மணியளவில் புக்காரா விமானமும், பொம்மர் ஒன்றும், ஹெலிகொப்டர் ஒன்றும் கிளிநொச்சி பகுதி கிராமங்களை சுற்றி வட்டமிட்டு குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின.

இத்தாக்குதலின்போது இருவர் படுகாயமடைந்தனர். இவர்களில் ஆறுமுகம் இந்திராணி என்பவர் பலத்த காயமடைந்துள்ளார். ஒருவீடு முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன் மூன்றுக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன நாற்பதுக்கும் மேற்பட்ட கால்

(4-ம் பக்கம் பார்க்க)

## படகுசேவை நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று முதல் மறு அறிவித்தல் வரை நடைபெறமாட்டாது என தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறை அறிவித்துள்ளது

## பாதுகாப்பு வலயத்தில் தாக்குதல் நடத்தக்கூடாது ஹமில்டன் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பு வலயத்தினுள் தாக்குதல் நடத்தக்கூடாதென பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தமது படையினருக்கு உத்தரவிட்டுள்ளார் என்று சர்வதேச சஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிட பிரதிநிதி திரு. பியஸ்சுவிட்ஸர் புலிகளின் குரலுக்கு தெரிவித்

(2-ம் பக்கம் பார்க்க)

## நேற்றிரவும் கடும் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து நேற்று இரவு 9 மணிக்கு யாழ்ப்பாணப்பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை பலாலி இராணுவ முகாமில் இருந்தும்

(4ம் பக்கம் பார்க்க)

## வெட்டுப்புள்ளியில் மாற்றம் செய்ய மறுப்பு

(யாழ்ப்பாணம்)

92/93ம் ஆண்டில் யாழ். பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி முறையில் மாற்றம் எதுவும் செய்ய முடியாது என பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அண்மையில் கொழும்பு சென்ற யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 5 பேரடங்கிய குழுவொன்று கொழும்பில் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவைச் சந்தித்து உரையாடியது.

(3ம் பக்கம் பார்க்க)

## சிறிமாவின் அழைப்பை தமிழ்க்கட்சிகள் புறக்கணிப்பு

(கொழும்பு)

நாட்டை சீரழிக்கும் போரை உடனே நிறுத்தும்படி கோரி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நடத்தவிருக்கும் பேரணியில் கலந்துகொள்ளும்படி தமிழ்க் கட்சிகளுக்கு திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா விடுத்த அழைப்பை தமிழ்க்கட்சிகள் ஒருமனதாக புறக்கணித்துவிட்டதாக பி.பி.சி. நேற்று தெரிவித்தது.

இதுபற்றி பி.பி.சி. மேலும் தெரிவிக்கையில், கடந்த பத்து ஆண்டுகளாக நடந்துவரும் மேற்படி போருக்கு தீர்வு காணும்

(3-ம் பக்கம் பார்க்க)

## 5-ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ். கந்தரோடை மாணவன் 190புள்ளிகள் பெற்றுசாதனை

(கொழும்பு)

நேற்று வெளியிடப்பட்ட ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின்படி தமிழ்மொழி மூலபரீட்சையில் முதலாம் இடம் யாழ்ப்பாணம் கந்தரோடை தமிழ் வித்தியாலயமாணவன் ஜி. பிரகாஷ் என்பவருக்குக் கிடைத்திருக்கிறது. இந்த மாணவர் 190 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

பசறை பிபிலேகம கொத்தணி பாடசாலை மாணவன் டபிள்யூ எம். என் பி. ஜே. பண்டார 198 புள்ளிகள் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இந்தப்பரீட்சையின் பெறுபேறுகளின் படி 20 ஆயிரத்து

(4ம் பக்கம் பார்க்க)

## அர்த்தமற்ற யுத்தத்தை அரசு நடத்துகின்றது

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய ஆட்சியாளர்கள் ஓர் அர்த்தமற்ற யுத்தத்தை நடத்தி நாட்டைக் குட்டிச்சுவராக்குவதுடன் ஆயிரக்கணக்கில் உயிர்ப்பலியையும் ஏற்படுத்துகின்றனர் என்று கொழும்பு பத்திரிகையொன்று கண்டனம் தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு போர் விமானங்களும், ஹெலிகொப்டர்களும் குண்டுகளாகவும், எவ்வாறு

(4-ம் பக்கம் பார்க்க)

**மணிவாக்கு**

உபதேச மொழிகளை விட முன்மாதிரிகள் மனத்தில் பலமாகப் பதிகின்றன.
— ஹென்றி பீச்டின்

# நமது நோக்கு

## என்ன குழப்பமிது?

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரக் கோரி பேரணிகள் நடாத்தச் சுதந்திரக் கட்சி முடிவு செய்துள்ளது.

இனப்பிரச்னைக்கு ஜனாதிபதி விஜயதுங்காவிடம் சரியான தீர்வு எதுவும் இல்லை எனவும் அக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

நாட்டின் சீரழிவைத் தடுத்து நிறுத்த, போரின் கொடூரங்களை நீக்கி உடனடியாகச் சமாதானத்தைக் கொண்டுவர அவரது முயற்சி வழிவகுக்குமா?

தமிழ் மக்கள் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்துப் போராடி வருகிறார்கள் என்பதை அவர் ஏற்றுள்ளாரா?

பூநகரித் தோல்வியால் தெற்கிலே உருவாகிய நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, பதவியைப் பிடிக்க முயற்சி எடுக்கிறார் என்ற சந்தேகம் எழுவதில் நியாயமிருக்கின்றது.

ஏனெனில் அவர் கூறும் கருத்துக்களிலே காணப்படும் குழப்பங்களும், முரண்பாடுகளும் ஏராளமானவை.

யுத்த நிறுத்தம் வேண்டும் என அவர் கூறியதும், நாடு முழுவதிலும் ஒரு நிம்மதிப் பெருமூச்சு வெளிவரும்.

ஆனால், அவரது கருத்துக்களைத் தொடர்ந்து கேட்பவர்கள் ஏக்கப் பெருமூச்சு விடுவதைத் தடுக்க முடியுமா?

இராணுவ வீரருக்குச் சரியான தலைமை இல்லை. ஆதாரம் இல்லை எனக் கூறுவது எதனைக் காட்டுகிறது?

இரட்டை வேடமிட்டு ஒரே நேரத்தில் பல கருத்துக்களைக் கூறி, விரும்பியவர்கள் விரும்பியவாறு கருத்தெடுத்து ஏமாந்து போகட்டும் என்ற அரசியல் தந்திரம், வஞ்சகத்தன்மை பளிச்சிடுகிறது.

அவரது இத்தகைய போக்கினால், தெளிவான இலக்கியம் அற்ற போக்கினால் நீண்டகாலமாகவே எதிர்க்கட்சியில் இருக்க வேண்டிய அவலநிலை இருப்பதை அவர் உணராமலிருப்பது கவலைக்குரியதாகும்.

"அரசியல் தீர்வு என்று வார்த்தைகளை வடித்து விட்டு போரைத் தீவிரப்படுத்தும் வெட்கக் கேடான முயற்சி இது!" நவசமசமாஜக் கட்சி செயலாளர் டாக்டர் விக்கிரமபாகு இவரது இரட்டை வேடத்தைக் கண்டித்திருப்பது சிந்தனைக்குரியது.

யுத்தத் தீர்வு அல்லது அரசியல் தீர்வு — இதில் எதனை அம்மையார் விரும்புகிறார் என்பதைத் தெளிவாகக் கூறும் வரை, அரசியலிலே கருத்துக் குழப்பம் தொடரும்; நாடும் உருப்பட வழி பிறக்காது!

# யுத்தம் வேண்டாம் என்று பலாலி முகாமில் ஆர்ப்பாட்டம்

(நெல்லியடி)

விடுதலைப் புலிகளுடனான சண்டையை ஆயுதமூலம் ஒரு போதும் தீர்க்கமுடியாது; பேச்சுவார்த்தையினாலேயே தீர்க்கமுடியும். அப்போது சிங்கள இராணுவத்தினராகிய நாமும் உயிருடன் வாழமுடியும்"

இவ்வாறு பலாலி ஸ்ரீலங்கா இராணுவமுகாமிலுள்ள சில இராணுவத்தினர் அண்மையில் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர் என்று, கடந்த ஞாயிற்றுக்கிழமை பலாலி இராணுவ முகாமிலிருந்து விடுதலையாகியவர்களில் ஒருவரான பருத்தித்துறை ஓடக்கரையைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியம் ராஜன் (வயது 30) என்பவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்;

1992ம் ஆண்டு பங்குனி மாதம் 31ம் திகதி பருத்தித்துறை கடலில் வைத்து கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டேன். மறுநாள் காரைநகர் கடற்படைத் தளத்திற்கு கொண்டுசென்று என்னை பலமாகத் தாக்கினார்கள். இதனால் நான் மயக்கமுற்று நிலத்தில் வீழ்ந்தேன்.

பின் சில நாட்களில் பலாலி இராணுவ முகாமில் என்னை ஒப்படைத்தனர். அங்கும் ஒரு மாதம் நல்ல அடி உதை கிடைத்தது. பலாலியில் என்னை அடைத்து வைத்த காலப்பகுதியில் கொழும்பிலிருந்து பலாலி முகாமுக்கு விஜயம் செய்த சிங்கள பௌத்த மதகுரு ஒருவர், இராணுவ பிரிகேடியர் உட்பட அனைவர் மத்தியிலும் உரையாற்றுகையில், புலிகள் தம்வசம் வைத்திருக்கும் யுத்தக் கைதிகளை விடுதலை செய்த பின்னரே, பலாலியிலுள்ள தமிழ்க் கைதிகளை விடுதலை செய்யும்படி கூறியிருந்தார்.

இதனாலேயே இதுவரை காலமும் நான் அங்கு அடைத்து வைக்கப்பட்டேன் என்றும் கூறிய அவர், அண்மையில் பூநகரியில் இடம்பெற்ற விடுதலைப் புலிகளுடனான இராணுவச் சண்டைநேரம், பலாலியிலுள்ள இராணுவத்தினர் கோபத்துடன் காணப்பட்டனர் என்றும் தெரிவித்தார். (160-சி)

## கோரிக்கை

(உடுவில்)

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரி உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா இறுதிப் பரீட்சையை நடத்தும்படி கோரும் தீர்மானம் மாணவர்களால் நிறைவேற்றப்பட்டு அதன் மகஜர் பரீட்சை ஆணையாளர், உயர் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## தும்புத் தொழில் ஊக்குவிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

ஒவ்வொரு கிராமங்கள் தோறும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைத் தெரிவு செய்து கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தினூடாக பல்வேறு உதவிகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வழங்கி வருகின்றது.

இதன் அடிப்படையில் தும்புத் தொழிலை ஊக்குவிக்கும் நோக்குடன் நுணாவில் மத்தி கிராமத்தின் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 10 குடும்பங்களைத் தெரிவு செய்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அப்பகுதி கிராமிய உற்பத்திக் குழுவினர் தலா 4750-/ வீதம் வழங்கியுள்ளதை குறிப்பிடத்தக்கது.

## வைத்திய ஊழியர்களை தீவுப்பகுதிக்குச் சென்று கடமையாற்றுமாறு பணிப்பு

(கொழும்பு)

தீவகப்பகுதி அரச வைத்தியசாலை ஊழியர்களை மீண்டும் அப்பகுதிகளுக்கு கடமைக்கு செல்லுமாறு வடக்கு — கிழக்கு மாகாணசபை சுகாதார மகளிர் விவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இதுபற்றி தெரியவருவதாவது:

தீவகத்தின் பல பகுதிகளிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றி இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து வேறு இடங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் மீண்டும் தீவகப் பகுதியிலுள்ள தமது முன்னைய அரசினர் வைத்தியசாலைக்கு சென்று கடமையாற்ற வேண்டும் என்று சுகாதார மகளிர் விவகார அமைச்சு மூலம் அறிவித்தல் அனுப்பி வைத்துள்ளது. —72-சி

## சமயபாடப் பரீட்சை

(கொழும்புத்துறை)

சரசாலை சரஸ்வதி வித்தியாலயத்தில் சைவசமயபாடப் பரீட்சை சரசாலை இந்து மன்றத்தினர் ஆரம்பித்து வைத்தனர்.

இப்பரீட்சையில் 75 மாணவர்கள் பங்குபற்றினார்கள். —154

## இன்றிருந்தால் பாரதியார் என்ன பாடுவார்?

நல்லதோர் நூல் படித்தே; அதை-நாலு பேரோடு கூடி
உள்ளதோர் சுவை பகிர்ந்தே; அதை-உவந்து
[illegible] மானுடர்க்கு
வெல்லமே நயம் கலந்து; அதன்-மேன்மையை
உணருமாறு
சொல்லவோர் தகுதியில்லா; வெறும்-சோற்றெருமைக்
கூட்டமானோம்!

வாசிக்க நேரமில்லை! புத்தக-வார்த்தையைச்
சுவைத்தவாறு
யோசிக்க நேரமில்லை! அந்தநல்-யோசத்தை
இழந்து நாளும்
காசுக்கு மாரடிக்கும், கெட்ட-கணினி உத்தியோக
மாசுக்கு அடிமையானோம்! நாம்-மனிதராய் இல்லை
இப்போ!

கலைகளில் ஆசை இல்லை! நல்ல-கவிதையில் ஆசை
இல்லை! நூல்
நிலைகளில் ஆசை இல்லை! உயர்-நெறிகளில் ஆசை
இல்லை! வெறும்
கலைகளில் ஆசை வைக்கும்! முழுக்-கடைவராய் ஆன
எங்கள்
தலைகளில் மூளை இல்லை எனும்-தகுதியைப்
பெற்று விட்டோம்!

ஆளுக்கு ஆடை வாங்கப்; பணம்-ஆயிரம்
செலவழிப்போர்
நூலுக்கு மட்டும் ஈயார்! பெரும்-நூதனப்
பிறவியானோர்!
மேலுக்குச் "சோப்"பை இட்டு; அதை-மெத்தவே
மினுக்குவோர் தம்
மூளைக்கு அறிவை இட்டு; அதை-மினுக்கிட
மறந்து போனார்!!

—ஜெ. கி. ஜெயசீலன்

(இன்று மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 111-வது பிறந்த நாள்)

**கனிவளம் பெருக்கி பிணிதனை குறைப்போம்**

## இராசிபலன்

11-12-1993
சனிக்கிழமை
(தமிழுக்கு கார்த்திகை 26)

திரயோதசி மாலை 6-59 வரை. விசாகம் மு. இ. 9-54 வரை. சித்தயோகம் சனிப்பிரதோஷ விரதம், இராகுகாலம் காலை 9-19 முதல் 10-19 வரை, சுப நேரம் மாலை 3-19 முதல் 4-49 வரை.

மேஷம்: வீண் கவலை, தொழில் போட்டி. வாக்குவாதம்.

இடபம்: மனதுக்கினிய சம்பவம், பணவரவு, பெரியோர் ஆசி.

மிதுனம்: காரிய சித்தி, அந்தரங்க சந்திப்பு, குடும்ப மகிழ்ச்சி.

கடகம்: பிறர் எதிர்ப்பு, உடல் ஆரோக்கியக் குறைவு, அலைச்சல்.

சிங்கம்: நிம்மதி குறைவு, வெளியார் தொல்லை, பணக்கஷ்டம்.

கன்னி: சமூக நற்பணி, செல்வாக்கு, அதிர்ஷ்டவாய்ப்பு.

துலாம்: நம்பிக்கைக் குறைவு, சகோதர பகை, புத்திரர் செலவு.

விருச்சிகம்: கலைத்துறை ஈடுபாடு, சுகநலம், பயணம்.

தனுசு: குடும்ப எதிர்ப்பு, வாழ்க்கைப் போராட்டம், மறதி.

மகரம்: பணியாளர் சகாயம், விருந்தோம்பல், நண்பர் வருகை.

கும்பம்: கடும் உழைப்பு, நற்செய்தி. குடும்ப ஒற்றுமை.

மீனம்: மனக் குழப்பம், தடுமாற்றம், புறம்பேசுதல்.

ஜோஸ்யர்.

**சிறிமாவின்** (1ம் பக்கத் தொடர்ச்சி)

முகமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இதுவரை எந்தவொரு தீர்வுத் திட்டத்தையும் முன் வைக்கவில்லை.

இக்கட்சி இப்போருக்கான தனது தீர்வுத்திட்டத்தை முன் வைக்கும்வரை அக்கட்சி எடுக்கும் எந்த ஒரு முடிவுக்கும் தாம் ஆதரவு கொடுக்கப் போவதில்லையென்று தமிழ்க் கட்சிகள் கூறுகின்றன.

வடக்கையும், கிழக்கையும் பிரிப்பதற்கு ஆதரவு தெரிவித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தற்போது அரசியல் லாபம் தேடும் முகமாக நடத்தவிருக்கும் இப்பேரணியில் மானமுள்ள ஒரு தமிழனும் கலந்து கொள்ள மாட்டான் என்று தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் நேற்று கொழும்பில் தெரிவித்தார்.

எதிர்வரும் புதன்கிழமை முதலாவது ஆர்ப்பாட்டப் பேரணி கொழும்புக்கு வெளியே நடக்கவிருப்பது குறிப்பிடத்தக்கது. —வி-

**போரை நிறுத்துங்கள்** (1ம் பக்கத் தொடர்ச்சி)

போரைக் கண்டிக்கிறோம் என்று கோஷமிட்டனர்கள்.

இது சமாதானமாகத் தீர்க்கப்படவேண்டிய விஷயம். அரசியல் வாதிகள் தமது பதவிகளைத் தக்க வைத்துக் கொள்வதற்காக இந்தப் போரை நன்கு பயன்படுத்தி வருகின்றார்கள் என்பது எமக்கு தற்போது நன்கு தெரிந்து விட்டது என்று இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பெண் ஒருவர் தெரிவித்தார்.

பெண்களின் இந்த ஆர்ப்பாட்டம் நேற்று கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் நடைபெற்றது. (வீ-ரி)

**வெட்டுப்புள்ளி** (1ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சந்திப்பின் பின்னர் யாழ். பல்கலைக்கழக மாணவருக்கான மகாபொல புலமைப்பரிசில் இருமடங்காக வழங்குவதற்கும் மாணவர்களுக்கான சாதனங்கள் மற்றும் கல்வி உபகரணங்களை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கவும் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (சி)

**பூநகரி** (1ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விழாவையொட்டி யாழ்க்குடா முழுவதும் விழாக் கோலம் பூண்டிருக்கிறது. வீதிகள் வாசனங்கள், அலுவலகங்கள், இறங்கள் எங்கும் மஞ்சள் சிவப்பு கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளது.

இத்தாக்குதலின் போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களது திருவுருவப்படங்கள் இவ்விழா நாட்களில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு வெற்றி நாள் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

பூநகரி வெற்றிவிழா பொதுக் கூட்டம் இன்று மாலை 4 மணியளவில் மட்டுவில் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளதுடன் அணிவகுப்பு நிகழ்ச்சியும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# படையினர் இழப்பு டி. பி.யின் தோல்விக்கே வழி வகுக்கும்

## விமர்சகர்கள் கருத்து

(கொழும்பு)

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தனது வெற்றியைக் கருதிக் கொண்டு யுத்த நடவடிக்கைகளுக்கு உரமூட்டுவாரேயானால் அதனால் ஏற்படும் படையினர் இழப்புகள் அவரது தோல்விக்கு வழிவகுக்கும் என்று அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

வடக்கு கிழக்கில் மட்டுமே யுத்தம் இடம்பெறுகிறது என அரசு வெளிஉலகுக்கு கூறிவருகிறது. ஆனால் இந்த யுத்தம் தினமும் நாடு தழுவிய ரீதியில் பாரதூரமான இழப்புகளை ஏற்படுத்துவது நாளாந்த நிகழ்வாகி விட்டது.

பூநகரித் தாக்குதலின் பின்னர் தென்னிலங்கையின் பல பகுதிகளிலும் வீதிகள், சந்திகள் மற்றும் கட்டிடங்களில் பறக்க விடப்பட்டிருந்த வெள்ளைக் கொடிகள் இதனை நிரூபித்தன என்றும் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு கிழக்கில் காணப்படும் நிலைமை ஒரு பயங்கரவாத நிலைமையாக இருப்பதை விட ஒரு பெரும் யுத்தமாக உருவெடுத்திருப்பதையே தற்போது தெளிவாக அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது என்றும் அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ரி)

# போரை நடத்துவதற்கு அனுபவசாலிகள் இல்லை

(கொழும்பு)

அரச படையினரின் தரப்பில் சிரேட்ட அனுபவசாலிகளுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் இராணுவ நடவடிக்கைகளை முன்னின்று வழி நடத்திய சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளில் பலர் போர்களில் கொல்லப்பட்டுள்ளார்கள். மேலும் பலர் சேவை மூப்பின் அடிப்படையில் பதவி உயர்வுகளைப் பெற்றுப் போர்க்களங்களிலிருந்தும் விலகிக் கொண்டுள்ளார்கள். பலர் இராணுவ சேவையிலிருந்தும் ஓய்வு பெற்றுள்ளார்கள்.

இதனால் தற்போது யுத்தப் பிரதேசங்களில் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் படை அதிகாரிகளில் பலர் இளம் வயதினராகவே இருக்கின்றனர். -ரி

# கொழும்பு பாடசாலைகளில் தமிழ் மாணவர் ஆசிரியர்கள் பொலிஸாரால் விசாரணை

(கொழும்பு)

கொழும்பிலுள்ள தமிழ் பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் கல்வி கற்கும் உயர் வகுப்பு தமிழ் மாணவர்களையும் ஆசிரியர்களையும் தற்போது பொலிசார் தீவிரமாக விசாரணை செய்து வருவதாக கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கொழும்பில் தமிழர்கள் கைது படலம் மேலும் தீவிரமடைந்து வருவதுடன் கொழும்பிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் தமிழர் நடமாட்டமும் குறைந்து வருகிறது.

கொழும்பிலுள்ள பல பிரபல்யமான லொட்சுக்கள் விடுதிகள், ஹோட்டல்கள் பெரும்பாலும் வெறிச்சோடி காணப்படுகின்றன. வெளிநாடுகளிலுள்ள தமது பிள்ளைகளுடனும், உறவினருடனும் தொடர்புகளை ஏற்படுத்துவதற்காக கொழும்பு சென்றுள்ள நூற்றுக்கணக்கான தமிழர்கள் பொலிசாரினதும் இராணுவத்தினதும் கெடுபிடிகளுக்கு அஞ்சி தமது அலுவல்களை இடைநிறுத்திவிட்டு மீண்டும் வடபகுதிக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். — வி-ரி

# இந்திய வம்சாவழியினர் மீது தமிழகத்தில் துன்புறுத்தல்!

## தொண்டமான் குற்றச்சாட்டு

(சென்னை)

இலங்கையிலிருந்து தமிழ் நாடு திரும்பும் இந்திய வம்சாவளியினர் தமிழ்நாட்டில் பெரிதும் துன்புறுத்தப்படுவதாக அமைச்சர் தொண்டமான் சென்னையில் பத்திரிகையாளர்களிடம் நேற்று தெரிவித்தார்.

ஸ்ரீமா—சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரில் சிலர் படிப்படியாக தமிழகம் வருகின்றார்கள். இவ்வாறு தமிழகம் வரும் இவர்களை இலங்கைத் தமிழர்கள் என்று நினைத்து இங்குள்ள அதிகாரிகள் பெரிதும் துன்புறுத்துகின்றார்கள்.

இவ்வாறான மனிதாபிமானமற்ற செயல்களை நான் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளதுடன் இந்திய மத்திய அரசுக்கும் சுட்டிக்காட்டப்போவதாக அமைச்சர் தொண்டமான் மேலும் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார். (வி ரி)

### இளைஞர், யுவதிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பூநகரி கூட்டுத்தளம்மீது வெற்றிகரமாக நடந்து முடிந்த 'தவளை' இராணுவ நடவடிக்கையின் ஒருமாத பூர்த்தியை வெற்றிவிழாவாக எமது இயக்கம் கொண்டாடுகிறது.

இந்தத் தாக்குதல் வெற்றியின் அரசியல்-இராணுவ பரிமாணங்களை எமது மக்களுக்கு தெளிவுபடுத்தும் நோக்கிலும், இந்த இராணுவ சாதனையின் போது உயிர்நீத்த புலி வீரர்களது வீரத்தையும், தியாகத்தையும் தமிழினம் நினைவு கூரும் வகையிலும், இந்த வெற்றிவிழா அமையும்.

பூநகரி வெற்றியின் ஒருமாத பூர்த்தியை தமிழீழ மக்கள் கொண்டாடும் இந்தவேளையில் பூநகரிப் பேரழிவால் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து சிங்கள தேசம் இன்னமும் மீளவில்லை.

சிங்களதேசத்து இராணுவ வரலாற்றில் முதற்தடவையாக ஒரு இராணுவத் தோல்விக்கும், அதில் சிங்களப்படை சந்தித்த பெருநாசத்திற்கும் பொறுப்பேற்று அதன் இராணுவ ஜெனரல் பதவி விலக வேண்டிய நெருக்கடி சிறிலங்காவில் எழுந்துள்ளது.

தமிழீழம் என்ற தனியரசை நோக்கிய பாதையில் எமது விடுதலைப்போரை முன்னோக்கி வேகமாக உந்தித் தள்ளியுள்ள இந்த வரலாற்றுத் தாக்குதலில் 458 புலிவீரர்கள் உயிர்த்தியாகம் புரிந்துள்ளனர்.

பலம் வாய்ந்த ஒரு கடற்படைத் தளத்தையும், சக்தி வாய்ந்த ஒரு கவசவாகனப் பிரிவையும் கொண்ட 2,000த்துக்கும் மேற்பட்ட படையினருடன் 25 கி. மீ. பரப்பளவிலான பகுதியில் அமைந்திருந்த பிரமாண்டமான படைத்தளமாக பூநகரி கூட்டுப்படைத்தளம் அமைந்திருந்தது.

குடாநாட்டின் மீது கடந்த இரண்டு வருடங்களில் சிங்களப்படைகள் தொடுத்துவரும் முற்றுகைப் போரில் பூநகரி கூட்டுத்தளம் பிரதான பாத்திரத்தை வகித்து வந்தது. கிளாலி கடல் நீரேரியூடாக பயணம் போன 300க்கும் மேற்பட்ட தமிழ் மக்களைக் கொன்ற கொலைகாரர்களின் இரும்பிடமாகவும் இத்தளமே விளங்கி வந்தது.

குடாநாட்டு மக்களின் உயிர் நாடியை நெரிக்க உதவிய இக் கூட்டுப்படைத்தளம்மீது 11-ம் திகதி அதிகாலை தொடக்கம் 13ம் திகதி மாலை வரை புலிவீரர்கள் தொடுத்த பெருந்தாக்குதலில் பூகம்பத்தில் அகப்பட்ட பகுதிபோல இப்படைத்தளம் சிதைந்துவிட்டது. அத்துடன் சிங்களப் படைத்துறைத் தலைமை செயற்படுத்தி வந்த போர் முறைத் திட்டமும் தவிடு பொடியாகிவிட்டது.

இத்தளத்திலிருந்த 1000த்துக்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டுவிட்டனர். 100 கோடி ரூபா பெறுமானமுள்ள ஆயுத தளபாடங்களை படையினர் இழந்துவிட்டனர் என்று கொழும்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

சிங்கள இனத்தை சோகத்தில் ஆழ்த்திவிட்ட இப்பெருந்தாக்குதலில் புலிவீரர்கள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்களின் சக்தியும், அவற்றின் எண்ணிக்கையும் எமது இயக்கத்தின் ஆயுதபலத்தை திடீரென அதிகரிக்கச் செய்துவிட்டது.

இப்பேராயுதங்களும், அவற்றின் சுடுதிறன்களும் விடுதலைப்போரின் போக்கை தமிழினத்திற்குச் சார்பான வகையில் திசை திருப்பிவிட வல்லது என்பது தமிழினம் மகிழ்ச்சியுடன் உள்வாங்கும் ஒரு செய்தியாகும்.

புலி வீரர்களின் அர்ப்பணிப்புகளால் பெற்றுக்கொள்ளப்படும் இந்தப் பெருவெற்றிகள் தமிழீழம் என்ற உறுதியான இலட்சியப் பாதையில் நிலைநிறுத்தப்படவேண்டும்.

இந்த விடுதலை இலட்சியத்தில் நாம் ஒன்று திரண்டு எதிரியின் சவால்களை எதிர்கொள்ளவேண்டும். இப்பெருவெற்றியில் நாம் பறித்தெடுத்த ஆயுதபலத்துடன், ஆட்பலத்தையும் அதிகரித்து எமது தேசிய விடுதலை இலக்கை பலம்பொருந்தியதாக கட்டியெழுப்புவோம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. -ரி

### கிரிக்கெட்:

## மே. இந்தியா 4-99

(கொழும்பு)

இலங்கை-மே. இந்திய அணிகளிடையே மொறட்டுவையில் நடைபெறும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 3ம் நாள் ஆட்டம் முடிவடையும்போது மே. இந்தியா முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 99 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 190 ஓட்டங்களைப் பெற்றது. அரவிந்த டி சில்வா-53 ஓட்டங்களைப் பெற்றார். (ஐ)

### 5ம் ஆண்டு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

555 மாணவர்கள் பிரபலபாடசாலைகளில் சேரும் தகுதிபெற்றிருக்கிறார்கள்.

இம்முறை பரீட்சைக்கு மூன்று லட்சத்து 27 ஆயிரத்து 746 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தார்கள்.

ஆகக் கூடுதலான புள்ளிகளினதும் பெற்றோரது வருமானத்தினதும் அடிப்படையில் ஏழாயிரத்து 391 மாணவர் புலமைப் பரிசில்களைப் பெற்றுக்கொள்வார்கள்.

பரீட்சை பெறுபேறுகள் அடுத்த வாரத்துக்குள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும். (இ-ரி)

### அர்த்தமற்ற

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாகவும் தினமும் பலலட்ச ரூபாய்களை தமது அசுரப் பசிக்கு இரையாக்கி வருகின்றன. ஆண்டுதோறும் கோடிக்கணக்கான ரூபாய்கள் விரயம் செய்து போர்த்தளபாடங்கள் வாங்கிக் குவிக்கின்றது.

ஒரு இராணுவ சிப்பாயை உருவாக்க பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை அரசு செலவு செய்கிறது. இச்செலவீனங்கள் யாவும் எதுவித பயனையும் அளிக்கவில்லை. மாறாக படையினர் இறக்கும் தொகை அதிகரிப்பதுடன் போர்த்தளபாடங்களை பெருமளவில் புலிகளிடம் இழக்கும் நிலையுமே காணப்படுகிறது என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. —ரி

# யாழ். நகரப் பகுதியில் வெற்றி தீப்பந்த ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

இன்று ஆரம்பமாகும் பூநகரி கூட்டுப்படை முகாம் தகர்ப்பு வெற்றிவிழாவின் முன்னோடி நிகழ்வாக நேற்று யாழ்நகரப் பகுதியில் வெற்றித் தீப்பந்த ஊர்வலம் நடைபெற்றது.

இளைஞர்களும், இளம் பெண்களும் இணைந்து சுமார் 36 தீப்பந்தங்களை ஏந்தியவாறு ஊர்வலத்தில் சென்றனர்.

நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் நேற்றிரவு 7 மணிக்கு ஆரம்பமான ஊர்வலம் கோவில் வீதி, நல்லூர் வீதி வழியாக யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலை சென்றடைந்தது.

வீதிகள்தோறும் ஊர்வலத்திற்கு ஆதரவு வழங்கி மக்கள் ஊர்வலத்தில் இணைந்து கொண்டனர். —ரி

### கிளிநொச்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடைகள் கொல்லப்பட்டுள்ளன. பெருமளவு தென்னை மற்றும் மாமரங்கள் சேதமாகின.

இத்தாக்குதலின்போது பரீட்சை எழுதிக் கொண்டிருந்த 236 பரீட்சார்த்திகளும் மேற்பார்வையாளர்களும் அவலக்குரல் எழுப்பியவாறு சிதறி ஓடினர். இத்தாக்குதலின் போது அரிசி ஆலையொன்றும் அரச அலுவலகம் ஒன்றும் சேதமடைந்தன.

இச்சம்பவத்தின் பின் மீண்டும் பத்து மணியளவில் புக்காரா விமானம் ஒன்று அப்பகுதியில் ரொக்கெட் தாக்குதலை நடத்தியது. இதனால் பலர் காயமடைந்தனர். விடுதலைப்புலிகள் நடத்திய எதிர்த்தாக்குதலையடுத்து புக்காரா விமானம் பின்வாங்கிச் சென்றது.

இத்தாக்குதலில் மாதகலிலிருந்து இடம்பெயர்ந்து சென்ற நாகமுத்து (50 வயது), சுப்பையா மல்லிகா (19 வயது), வடிவேல் புவிஞ (20 வயது), ராசம்குமார் சுதர்சன் (8 வயது), சுகிலன் (13 வயது), சுப்பிரமணியம் அற்புதலிங்கம் (42 வயது) ஆகியோர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 6ம் திகதி மன்றும் கிளிநொச்சியில் பரீட்சை நிலையம் மீது புக்காரா விமானங்கள் தாக்குதல் நடத்தியது கண்டித்த சிறிலங்கா அரசிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்ட பின்னர் மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. -ரி

### நேற்றிரவும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொண்டமானாறு உடுப்பிட்டிப் பகுதியை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்விரு ஷெல்தாக்குதல்களின் போதும் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவில்லை.

## அங்கத்தவர் கடத்தல்

(கொழும்பு)

தென்மாகாண சபையின் பொதுசன ஐக்கிய முன்னணி அங்கத்தவரான விமல் பிரான்சிஸ் கூ என்பவரைக் காணவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மாகாண சபையின் வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் திரு. பிரான்சிஸ் கூ கலந்துகொள்ள வந்தார். இப்போது அவரைத் திடீரெனக் காணவில்லையென பொதுசன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த மகிந்த சமரவீர என்பவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை காணாமல் போயுள்ள திரு. பிரான்சிஸ் கூவின் மனைவியான நந்தா விமல குணரத்ன தனக்கு நேற்று பிற்பகல் ஒரு அனாமதேய தொலைபேசி அழைப்பு வந்ததாகவும் தனது கணவரைப்பற்றிய நினைவை மறந்துவிடுமாறு அதில் தெரிவிக்கப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

இந்த தொலைபேசி அழைப்பு தொடர்பான தகவலை திருமதி குணரத்ன சம்பந்தப்பட்ட மாகாண சபையின் தலைவருக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து மாகாண சபையின் கூட்டம் 21ம் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளதாக அதன் தலைவர் அறிவித்துள்ளார்.

திரு பிரான்சிஸ் கூ கடத்திச் செல்லப்பட்டிருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாக திரு. மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (இ-ரி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10/336/B: